**ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, வேலூர் – 632 006**

**கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**

**முன்னிலை: திருமதி. செ. மணிமொழி, எம்.ஏ., எம்.எட்., எம்.பில்.,**

**ந.க.எண்: 091 /மாஒ6/பமேகு/ஒபக/2023, நாள்.22.01.2024.**

பொருள் : வேலூர் மாவட்டம் – ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி – பள்ளி மேலாண்மைக் குழு – 2024 ஜனவரி 26ஆம் தேதி – குடியரசு தினத்தன்று நடைபெறும் கிராமசபைக் கூட்டத்தில் – பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்டத் தீர்மானங்களை கூட்டப் பொருளாக இணைத்தல் – சார்பு.

பார்வை : சென்னை – 06, ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, மாநில திட்ட இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.1680/A11/பமேகு/ ஒபக/2023, நாள்:19.01.2024.

*******

பார்வையில் கண்டுள்ள சென்னை 06, ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, மாநில திட்ட இயக்குநரின் செயல்முறைகளின் படி பள்ளி மேலாண்மைக் குழுவில் பள்ளி வளர்ச்சி, கற்றல் கற்பித்தல், உட்கட்டமைப்பு, மாணவர் பாதுகாப்பு, பள்ளி இடைநிற்றல் மற்றும் உயர்கல்வி தொடர்பாகப் பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்படும் தீர்மானங்களை கிராம சபைக் கூட்டத்தில் பகிர்ந்துகொள்ள வேண்டும். அதனடிப்படையில் வருகின்ற **2024, ஜனவரி மாதம் 26 ஆம் தேதி (வெள்ளிக் கிழமை) "குடியரசு தினத்தன்று"** நடைபெறவிருக்கும் கிராமசபைக் கூட்டத்தில் பள்ளி மேலாண்மைக் குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை கூட்டப் பொருளாக இணைத்து விவாதிப்பது சார்ந்து கீழ்க்கண்ட வழிமுறைகளைப் பின்பற்றிட அறிவுறுத்தப்படுகிறது.

வழிகாட்டுதல்கள்:

1. 2024, ஜனவரி மாதம் 26ஆம் தேதி (வெள்ளிக்கிழமை) "குடியரசு தினத்தன்று" நடைபெறவிருக்கும் கிராமசபைக் கூட்டத்தில் பள்ளியின் சார்பில் தலைமையாசிரியர், ஆசிரியர் பிரதிநிதி, பள்ளி மேலாண்மைக் குழுவின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொள்ள வேண்டும்.
2. பள்ளி வளர்ச்சி சார்ந்த தேவைகள், கற்றல் கற்பித்தல் போன்றவை தொடர்பாக பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்டத் தீர்மானங்களை தொகுத்து நடைபெறவிருக்கும் கிராமசபைக் கூட்டத்தில் பகிர்ந்து உரிய தீர்மானங்களை கிராமசபையில் இயற்றிட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3. கிராமசபை கூட்டத்தில், பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டத் தீர்மானங்களைப் பகிர்ந்து கொள்வதன் மூலம் கிராமப் பஞ்சாயத்து நிர்வாகமும், மக்களும் தங்கள் பள்ளி சார்ந்த பிரச்சனைகள் மற்றும் தேவைகளை அறிந்து தங்களின் பங்களிப்பை அளிக்க வாய்ப்புகளை ஏற்படுத்த வேண்டும்.
4. கடந்த கிராமசபைக் கூட்டத்தில் முன்வைத்த பள்ளித் தேவைகள் குறித்த தீர்மானங்களின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து கேட்டறிந்து அடுத்த பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்டத்தில் கலந்தாலோசிக்க வேண்டும்.
5. இச்சிறப்பு கிராம சபைக் கூட்டத்தில் பள்ளி மேலாண்மைக் குழு கருத்தாளர்கள் பார்வையாளர்களாகக் கலந்துகொள்ள வேண்டும்.

மேற்காண் வழிகாட்டுதல்களைப் பின்பற்றி நடைபெறவிருக்கும் கிராம சபைக் கூட்டத்தில் தலைமையாசரியர், ஆசிரியர் பிரதிநிதி உள்ளிட்ட பள்ளி மேலாண்மைக் குழு தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் பங்குபெறுவதை மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள், வட்டாரக்கல்வி அலுவலர்கள், வட்டார வள மைய மேற்பாரவையாளர்கள், ஆசிரியப் பயிற்றுநர்கள் மற்றும் TNEF – Fellow க்கள் உறுதிசெய்ய அறிவுறுத்தப்படுகிறார்கள்.

கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலர்,
ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி,
வேலூர் மாவட்டம்.

பெறுநர்:

1. அனைத்து அரசு தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள், வேலூர் மாவட்டம்.
2. அனைத்து வட்டாரக் கல்வி அலுவலர்கள், வேலூர் மாவட்டம்.
3. அனைத்து வட்டார வள மைய மேற்பார்வையாளர்கள் & ஆசிரிய பயிற்றுநர்கள், வேலூர் மாவட்டம்.
4. பள்ளி மேலாண்மைக் குழு மாவட்ட & வட்டார கருத்தாளர்கள், வேலூர் மாவட்டம்.

நகல்:

1. சென்னை–06, ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, மாநில திட்ட இயக்குநர் அவர்களுக்கு பணிவுடன் அனுப்பப்படுகிறது.
2. வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் அவர்களுக்கு கனிவுடன் அனுப்பப்படுகிறது.
3. மாவட்டக் கல்வி அலுவலர்கள் (இடைநிலை மற்றும் தொடக்கக்கல்வி), வேலூர் மாவட்டம்.